# வேதனை மாளாது; செல்வமே! விழுத்துயர் மறையாது!

செல்வமே! கழகத்தின்
செம்மலே! கலைஞரின்
செல்லமே! மாறனின்
செவ்வேளே!தளபதி
அல்லலில் சாய்வதற்கு
அணையான
தடந்தோளே!
செல்வியின் செல்வமே!
சீரெழில் தந்தையே!
முல்லைபோல் தூயனே,
முத்துவேலர் பேரனே!
எல்லையில் அன்பனே,
எல்லோருக்கும் நண்பனே!

மெல்லவே என்றாலும்
மிளிர்ந்திடும்
கொள்கைவாளே!
நில்லாமல் சுழன்றிட்ட
நெடுங்கோளே! நீயின்று
இல்லையென்று
செய்திவர
இதயந்தான் வெடிக்கிறதே!

நல்லவன் உனைப்போல
நானிலத்தில்
காண்பதெங்கே?
ஒல்லுமோ உனைப்போல
உளமுயர்ந்தோர்
காண்பதற்கு?
நெல்லுக்குள் மணியாக
நிறைந்தவனே, களையான
புல்லுக்கும் கெடுதலைப்
புரியாத பூமகனே!
சொல்லுக்குச் சுடுமென்று
மென்மையாய்ச்
சொல்பவனே!
கல்லுக்கும் பெருகுமே
கழிவிரக்கக் கண்ணீர்தான்!
கயவனவன் காலனுக்குக்
கண்ணீர்தான்
இல்லையோ?

மல்லுக்கு நிற்காமல்
மாற்றாரை ஈர்க்கின்ற
வில்லுக்குப் போவதெங்கே?
வித்தகம் சாவதுண்டோ!

எப்போது அழைத்தாலும்
இரவுபகல் என்றாலும்
அப்போதும் பேசுவாய்;
அகில்மணம் வீசுவாய்!
இப்போது முயல்கின்றேன்;
இடைவிடாது அழைக்கின்றேன்;
தப்பாத மணிச்சத்தம்
தடையின்றி ஒலிக்கிறது,
எப்போதும் எடுக்கும்நீ
இன்றேனோ
எடுக்கவில்லை?

ஒப்பித்தான் பேசாமல்
உறக்கந்தான் பட்டாயோ!
தப்பித்தான் விட்டாயோ,
தணலில்எமை
விட்டாயோ,
கப்பித்தான் வந்தாலும்
காலனை முட்டாயோ?
செப்பியே அழுகின்றோம்
செல்வமே, மீண்டும்நீ
தப்பாமல் எழுவாயா?
தண்குரல் கொடுப்பாயா!

நட்பிற்கோர் இலக்கணம்
நாட்டிலே உண்டெனினும்
பெட்பான உனைப்போலப்
பேசுதற்கு யாருளார்?
தட்பவெப்பம் பார்த்தென்றும்
தண்மையாய்ப் பேசுகின்ற
ஒட்பத்தில் உயர்ந்தநீ
ஒருநாளும் பழக்கத்தை
விட்டுவிடாது இருப்பாயே,
வேண்டுவன செய்வாயே!
தொட்டுவிடாத்
தொலைவிலே துலங்கினும்
தொலைபேசி
எட்டுகிற இடத்திலே
எப்போதும் இருப்பாயே!

பட்டுப்போல் மென்மையனே,
பளிங்குபோல் உண்மையனே,
மொட்டுப்போல் எப்போதும்
முறுவலிக்கும் முகத்தினனே!
ஒட்டியிருந்து உறவாட
ஒல்லவில்லை என்றாலும்
எட்டியிருந் துரையாட
எப்போதும் தடையின்றிக்
கட்டுரைப்பாய், என்னுடைய
கவிதையும் புகழ்ந்துரைப்பாய்!

தொட்டுரைப்பாய், அரசியலைத்
துருவியும் தூண்டியும்
இட்டுரைப்பாய், எதிர்காலம்
எடுத்துரைப்பாய்,நேற்றுந்தான்
மட்டியாய்ப் பேசுகின்ற
மாநில ஆளுநரைக்
குட்டியே எழுதியவுன்
கூற்றினைநான் பாராட்ட,

வெட்கந்தான் அவர்க்கிலையே,
வேண்டுமட்டும் பண்பாகச்
சுட்டியே காட்டினாலும்
துரும்புக்கும் திருந்தலையே,
முட்டியே பார்த்தாலும்
முரண்டுக்கு வருந்தலையே,
திட்டியே பேசாமல்
தெளிவாக மொழிந்தாயே!
எட்டியே சென்றுவிட்டாய்
என்பதை நம்புவதா!
விட்டேனோ சென்றாயென
வேதனையால்
வெம்புவதா?

நான்போற்றும் மு.வ.வின்
நன்மறைவு நாளினிலே
ஊன்விட்டுப் போனாயே,
உலகுயிர் நீத்தாயே,
வான்விட்டுப் போனவொரு
வால்மீனாய் ஆனாயே,
கான்விட்டுப் போனவொரு
களிறாகி விட்டாயே,
தேன்சொட்டும் செந்தமிழைத்
தெவிட்டாமல் தொட்டாயே,
பான்முட்டும் பசுவாகப்
பலருக்கும் இட்டாயே,
ஏன்என்று விளக்குகின்ற
எழுத்துவிதை நட்டாயே,



தான்என்று தறுக்கியோரைத்
தமிழ்க்கோலால் சுட்டாயே!

மீன்முட்டும் கடல்போல
மேன்மேலும் கருத்தலைகள்
ஆனமட்டும் எழுப்பினையே,
ஆயிரம்வாள் எடுத்தனையே,
போனதுமேன்
புரியலையே,
பொழுதிங்கே
விடியலையே!

குற்றந்தான் சுமத்தினாலும்
கூண்டிலே நிறுத்தினாலும்
கொற்றந்தான் சீறினாலும்
கொலைவெறியே
பாய்ந்தாலும்
சற்றுந்தான் அஞ்சாத
தன்மானச் சிங்கமே!
உற்றுநீ பார்த்திட
ஒடுங்கிற்றுப் பொய்ச்சிங்கமே!
கற்றறிந்தாய் அண்ணாவின்
கலைஞரின் கதகதப்பில்
உற்றிருந்த வீரந்தான்
உதறியது மன்னிப்பை!
கற்பனை மனோகரனாய்
ஒடித்தெறிந்தாய்
கைவிலங்கை!
மற்போரில் வென்றவனாய்
மன்றத்தில் நின்றனை!
இற்றைக்கும் மறக்கத்தான்
முடியுமா இருவிழியால்!

மற்றுன்னை மாட்டிட
மருண்டது சித்தமே!
சிற்றறிவு நாயகிக்குத்
தெளிந்தது பித்தமே!
பற்றில்லாப் பெருமகனே,
பதவிநாடாத் திருமகனே,
நற்றவ மருமகனே,
நயச்செல்வி நாயகனே,
இற்றைக்கு மட்டுமல்ல
ஏழேழ் பிறவியிலும்
ஒற்றைக்கு ஒற்றையாய்
உயர்ந்தோங்கி எழுபவன்,
கொற்றவற்குக் கொற்றவனாய்க்
குலம்கூடித் தொழுபவன்!

புரந்தார்கண் நீர்மல்கப்
போயினையே, தளபதி
சுரந்திட்ட கண்ணீர்தான்
சொல்லுமே உள்ளத்தை!
இரந்தென்றும் ஒருவரிடம்
இறைஞ்சியே நிற்காத
வரமன்றோ பெற்றிருந்தாய்,
வளர்கின்ற தன்மானம்
நிரந்தரமாய் நாடியிலே
நிறைந்தவனே!
நெருப்பிலே
புரண்டாலும் கொள்கையில்
புறம்போகாப் பொன்னவனே,
திரண்டாலும் செல்வந்தான்
தீண்டாத மன்னவனே!
உருள்பெருந் தேர்த்
திருவாரூர்
ஒப்பில்லாச் செம்பியனே!
கரிகாலச் சோழனைக்
காத்தெடுத்து வளர்த்திட்ட
இரும்பிடர்த் தலையார்போல்
இருந்தாயே தளபதிக்கு!
கரும்பான சொற்களே
கனியிதழில் பொழியும்நீ
இரும்பான தூணாக
இருந்தாயே கலைஞர்க்கு!

அருந்தாத அமுதம்போல்
அத்தனை தூயவனே!
கருங்காலி கூட உனைக்
கைகூப்பித் தொழுவானே!
பொருந்தாத பேர்களும்
போற்றுவரே உனைக்கண்டால்!
திருந்தாத ஆட்களும்உன்
சிரித்தமுகம் கண்டுவிட்டால்
தருந் தீதை விடுவரே!
தடந்தேடி வருவரே!

பேராசிரியர்
மா.செல்வராசன்

செரு என்றால் போர்:அந்தச்
சிந்தனை உனையென்றும்
நெருங்கிய தில்லை,ஆனால்
நெடுங்கேடு கழகத்திற்கு
உருவாக்கும் கயவரை
ஒருநாளும் விட்டதில்லை!
திருவாக்குச் சிலந்தியாய்த்
தீட்டிய எழுத்துவலை
பெருமுத்து வேல்களாய்ப்
பிறங்கிடும் கருத்துவலை!

ஒருநாளில் உனைக்காண
ஓடிவர வேண்டுமென்று
பெருவிருப்புக் கொண்டுநான்
பேசிய போதெல்லாம்
ஒருநாளில் பார்ப்போமென்று
உரைத்தாயே, இன்றந்தத்
திருநாள்தான் இப்படியா
செல்வமே, அவலமாய்
வரவேண்டும்! கண்ணீரின்
வாரிதி ஆகவேண்டும்!

பூமாலை ஆயிரமாய்ப்
போட்டுன்னை வணங்குதலின்
தேமாவின் இனியனே
திரும்பவும்நீ எழுகவென்று
பாமாலை சூட்டவே
பாவலன் விழைகின்றேன்!
கோமானே, கழகத்தின்
கொள்கைவாள் குரிசிலே!
சாமான்யன் என்றண்ணா
சாற்றுதற்குச் சான்றானாய்;
ஓமான் பெருங்கடலில்
உயிர்விட்ட ஒப்பிலான்பேர்
மாமன்தான் வைத்தார்,நீ
மடியிலே தவழ்ந்ததும்
நாமம்தான் செல்வம்என
நானிலம் விளங்கிட!
ஆமாம், என்றுமே
அதுமெய்யாய்த் துலங்கிட!
ஈமந்தான் புகுந்தாயே,
யாமெல்லாம் கலங்கிட,
பூமிதான் அதிர்ச்சியில்
புரண்டிங்குக் குலுங்கிட!

செல்வத்துக் கேற்றவொரு
செல்வினனக் கலைஞரன்று
சொல்லிய சொல்லென்றும்
துலங்கிடும் சுடரன்றோ!
எல்லாமும் இருந்தும் நின்
இன்னுயிர் காணாமல்
புல்லியுனை அழுதழுது
பொழிந்துநீர் புலம்பிய
செல்விகுரல் கேட்கலையோ!
திறந்துவிழி பார்க்கலையே!
நல்லவன்நீ நாவசைத்து
நாலுசொல் பேசலையே,
பல்லவன் சிற்பமாய்ப்
படுத்துதான் விட்டாயே!

ஆதிமுதல் கலைஞருடன்
அரசியலில் துணையிருந்தும்
வாதிட்டுப் பார்த்ததில்லை;
வரிசைகேட்டு ஆர்த்ததில்லை;
ஓதிய கேட்பதன்றி
ஒருநாளும் பிறழ்ந்ததில்லை;
தோதாக இருந்ததன்றித்
துணையாக வளர்ந்ததன்றிக்
காதாக விரிந்ததன்றிக்
கண்ணாக விழித்ததன்றி

நீதாகம் கொண்டென்றும்
நின்றதில்லை பதவிக்கு;
ஏதொன்றும் கேட்டதில்லை:
எதையுமே வேட்டதில்லை;
ஈதொரு புதுமையே,
இளங்கா அடிகள்போல்
தீதறுக எனவாழ்ந்த
தியாகச் செல்வமே!
ஆதரவாய் எல்லோர்க்கும்
அன்போடு இருந்தவனே!
நாதம்போல் இனிக்கின்ற
நல்லிசை நாவினனே,
ஏதங்கள் இல்லாநீ
ஏகியதும் சரிதானா!
மாதங்கள் போனாலும்
ஆண்டுகள் மறைந்தாலும்
போதிங்கே விரைந்தாலும்
பருவங்கள் புரண்டாலும்
நீதங்கம், என்றென்றும்
நெஞ்சிலே அணியாவாய்!
ஆதவன் என்றும்நீ,
அணைதலும்
உண்டோ சொல்!

மீதளவு வாய்ப்பிருந்தும்
மேடைக்கு வாராத
சாதனை யாளனே!
சாற்றினும் போற்றினும்
வேதனை மாளாது;
விழுத்துயர் மறையாது!



திருச்சி, மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோவிலுக்கு 5 பேர் கொண்ட அறங்காவலர்களாக தமிழக அரசால் நியமிக்கப்பட்ட திருச்சி காந்தி மார்க்கெட் மன்னார் பிள்ளை தெருவை சேர்ந்த பா.சீனிவாசன், திருச்சி, தாராநல்லூர் அலங்கநாதபுரம் இரண்டாவது தெருவை சேர்ந்த மு.கருணாநிதி, மலைக்கோட்டை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தெருவை சேர்ந்த ரா.கலைச்செல்வி, திருச்சி, எடத்தெரு, கீழ நெய்க்கார தெருவை சேர்ந்த வி.ஸ்ரீதர், காட்டூர் காவிரி நகரை சேர்ந்த மு.கோவிந்தராஜ் ஆகியோர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம் ராஜ்முகமது மோகன் பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், ஈரோடு மண்டலம் சார்பில் புதிய பேருந்துகளின் இயக்கத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் என்.மணீஷ், துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர்கள் குறிஞ்சி என்.தண்டபாணி, சசிகுமார், மாமன்ற உறுப்பினர் வி.சி. நடராஜன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கோவை மேலாண் இயக்குநர் ஜோசப் டயாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.